ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2126/13 - 2019 ජුනි මස 03 වැනි සඳුදා - 2019.06.03

*2126/13 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு யூன் மாதம் 03 ஆந் திகதி திங்கட்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி I : தொகுதி (I) - பொது

### *அரசாங்க அறிவித்தல்கள்*

**_1948 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க குடிவருவோர், குடியகல்வோர் சட்டத்துடன் தொடர்புடைய 1956 ஆம் ஆண்டின் குடிவருவோர், குடியகல்வோர் ஒழுங்குவிதிகளைத் திருத்துதல்_**

*உள்ளக, உள்நாட்டலுவல்கள் மற்றும் மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சர் வஜிர அபேவர்தன ஆகிய நான், எனது அமைச்சு விடயப் பரப்புடன் தொடர்புடைய குடிவருவோர், குடியகல்வோர் சட்டத்தின் 23 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படக்கூடிய 52 ஆம் பிரிவின் கீழ் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தின் வீசா வழங்கும் தொழிற்பாட்டுடன் தொடர்புடையதாக தற்போதுள்ள வீசா வகைகளிலும், அறவிடப்படுகின்ற கட்டணங்களிலும் திருத்தங்களை மேற்கொள்ளும் பொருட்டு, குடிவருவோர், குடியகல்வோர் ஒழுங்குவிதிகளில் திருத்தங்களை மேற்கொள்ளல் எனும் தலைப்பில் (அமைச்சரவைப் பத்திர இல. 8/1A/2019) என்னால் அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்பட்ட 2019.01.31 ஆந் திகதிய அமைச்சரவைப் பத்திரத்தின் பிரகாரம், அவ்வமைச்சரவைப் பத்திரத்துடன் இணைக்கப்பட்டிருந்த குடிவருவோர், குடியகல்வோர் சட்டத்துடன் (அத்தியாயம் 351) தொடர்புடையதாக திருத்தப்பட்டு வரையப்பட்ட ஒழுங்குவிதிகள் இத்துடன் சமர்ப்பிக்கப்படுவதுடன், இவ்வரையப்பட்ட ஒழுங்குவிதிகளை அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கும், தொடர்ந்து அங்கீகாரத்தின் பொருட்டு பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிப்பதற்கும் கட்டளையிடுகின்றேன்.*

*வஜிர அபேவர்தன,*
*உள்ளக, உள்நாட்டலுவல்கள் மற்றும்*
*மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சர்.*

*உள்ளக, உள்நாட்டலுவல்கள் மற்றும்*
*மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சு,*
*"சுகுறுபாயா", 15 ஆம் மாடி,*
*ஸ்ரீ சுபூத்திபுர வீதி,*
*பத்தரமுல்லை,*
*2019, மே 20.*

1A - PG 4543 — 517 (2019/06)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

*ச. வ. பி. 10/ 2015*

**(351 ஆம் அத்தியாயமான) குடிவருவோர், குடியகல்வோர் சட்டம்**

*(351 ஆம் அத்தியாயமான) குடிவருவோர், குடியகல்வோர் சட்டத்தின் 23 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 52 ஆம் பிரிவின் கீழ் உள்ளக, உள்நாட்டலுவல்கள் மற்றும் மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சரினால் ஆக்கப்பட்டதும் பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள்.*

*உள்ளக, உள்நாட்டலுவல்கள் மற்றும்*
*மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சர்.*

கொழும்பு,
*2019, சனவரி 31*

ஒழுங்குவிதிகள்

*1956 ஆம் ஆண்டின் பெப்புருவரி மாதம் 24 ஆந் திகதிய 10,896 ஆம் இலக்க, இலங்கை அரசாங்க வர்த்தமானிக்கான குறைநிரப்பியில் வெளியிடப்பட்ட 1956 ஆம் ஆண்டின் குடிவருவோர், குடியகல்வோர் ஒழுங்குவிதிகள், இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-*

*1. எட்டாம் ஒழுங்குவிதியில்–*

*(1) ஓராம் பந்தியில் "புகைப்படத்தின் அல்லது கைவிரல் அடையாளங்களின் அல்லது இரண்டினதும் அத்தகைய எண்ணிக்கையிலான பிரதிகளைக் கொடுத்துதவுவதற்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக "புகைப்படத்தின் அல்லது உயிரளவையியலின் அல்லது இரண்டினதும் அத்தகைய எண்ணிக்கையிலான பிரதிகளைக் கொடுத்துதவுவதற்கு" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;*

*(2) இரண்டாம் பந்தியில், "அல்லது கைவிரல் அடையாளங்களின்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அல்லது உயிரளவையியலின்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.*

*2. பத்தாம் ஒழுங்குவிதியை உடனடுத்துப் பின்னர், பின்வரும் புதிய ஒழுங்குவிதியை உட்புகுத்துவதன் மூலமும் :-*

*"10அ. (1) எவரேனும் ஆளுக்கு அளிக்கப்பட்ட அல்லது வழங்கப்பட்ட ஏதேனும் விசாவில் தங்கியிருக்கும் காலப்பகுதி குறித்துரைக்கப்படும் நிபந்தனையை இலங்கையில் மேலதிக காலத்துக்கு தங்குவதன் மூலம் மீறுகின்ற அவ்வாள், மிகைத் தங்கியிருக்கை காலப்பகுதிக்கான ஏற்புடையற்பாலதான விசா கட்டணத்துக்கு மேலதிகமாக 500 ஐக்கிய அமெரிக்க டொலர்கள் தண்டமொன்றைச் செலுத்துவதற்கு தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்.*

*(2) ஓராம் பந்தியின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், விதித்துரைக்கப்பட்ட அதிகாரி –*

*(அ) ஓராம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட ஆள் ஒருவருக்கு புறப்படும் துறைமுகத்தில் இரண்டு நாட்கள் ; அல்லது*

*(ஆ) விசாவில் குறித்துரைக்கப்பட்ட தங்கியிருக்கை காலப்பகுதியின் நீடிப்பொன்றுக்காக குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்துக்கு விண்ணப்பிக்கின்றபோது ஏழு நாட்கள்,*

*சலுகைக் காலப்பகுதியொன்றை வழங்கலாம்.*

3. அதன் 13 ஆம் ஒழுங்குவிதிக்குப் பதிலாக பின்வரும் ஒழுங்குவிதியை இடுவதன் மூலமும் :-

"13. (1) விசாக்கள் தொடர்பில் செலுத்தப்படற்பாலதான கட்டணங்கள், கீழேயுள்ள பட்டியலில் தரப்பட்டவாறு இருத்தல் வேண்டும் :-

**பட்டியல்**

| விசாவின் வகைகள் | | கட்டணம் ஐக்கிய அமெரிக்க டொலர்களில் (US $) |
|---|---|---|
| 1. வதிவிட விசா | 1. பின்வருபவர்களுக்காக -<br>(i) முதலீட்டாளர்கள் ;<br>(ii) ஊழியர்கள் ;<br>(iii) மாணவர்கள் ;<br>(iv) இலங்கையில் மருத்துவ சிகிச்சையை நாடும் ஆட்கள்;<br>(v) அரச சார்பற்ற நிறுவனங்களை பிரதிநிதித்துவப் படுத்தும் ஆட்கள் ;<br>(vi) மதப் பணியாளர்கள் ;<br>(vii) விடயங்கள் (i), (ii), (iii), (iv), (v) மற்றும் (vi) என்பவற்றில் குறிப்பீடு செய்யப்பட்ட எவரேனும் ஆளின் வாழ்க்கைத் துணை ; அத்துடன்<br>(viii) விடயங்கள் (i), (ii), (iii), (iv), (v) மற்றும் (vi) என்பவற்றில் குறிப்பீடு செய்யப்பட்ட எவரேனும் ஆளின் தங்கி வாழும் பிள்ளையொன்று (ஒவ்வொரு பன்னிரண்டு மாத காலப்பகுதிக்கு அல்லது அதில் ஒரு பகுதிக்கு) | 200.00 |
| | 2. பின்வருபவர்களுக்காக -<br>(i) (349 ஆம் அத்தியாயமான) பிரசாவுரிமைச் சட்டத்தின்19, 20 அல்லது 21 ஆம் பிரிவுகளின் கீழ் இலங்கைப் பிரசாவுரிமை இல்லாதொழிந்துள்ள எவரேனும் ஆள் ;<br>(ii) விடயம் (i) இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆளின் வாழ்க்கைத் துணை ; அத்துடன்<br>(iii) விடயம் (i) இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆளின் தங்கி வாழும் பிள்ளைகளுள் ஒருவர் (ஒவ்வொரு பன்னிரண்டு மாத காலப்பகுதிக்கு அல்லது அதன் பாகத்துக்கு) | 100.00 |
| | 3. பின்வருபவர்களுக்காக-<br>(i) 1967 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க இந்திய - இலங்கை உடன்படிக்கை (அமுலாக்கம்) சட்டத்தின் 13 ஆம் பிரிவின் கீழ் இந்தியப் பிரசை ஒருவராகப் பதிவு செய்யப்பட்டுள்ள எவரேனும் ஆள்<br>(ii) விடயம் (i) இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆளின் வாழ்க்கைத் துணை ; அத்துடன்<br>(iii) விடயம் (i) இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆளின் தங்கி வாழும் பிள்ளைகள் ஒவ்வொருவரும் (ஒவ்வொரு பன்னிரண்டு மாத காலப்பகுதிக்கு அல்லது அதன் பாகத்துக்கு) | 100.00 |

**பட்டியல்** *(தொடர்ச்சி)*

| *விசாவின் வகைகள்* | | | *கட்டணம் ஐக்கிய அமெரிக்க டொலர்களில் (US $)* |
|---|---|---|---|
| | 4. மதகுருமார்களுக்கு | | இலவசம் |
| | 5. பின்வருபவர்களுக்காக -<br><br>(i) விண்ணப்பத்தைச் செய்யும் நேரத்தில் ஆறு மாதங்களுக்கு மேலாக திருமணம் தொடர்ந்திருக்கும் இலங்கைப் பிரசையொருவரின் இலங்கையரல்லாத வாழ்க்கைத் துணை.<br><br>(ii) விடயம் (i) இல் குறிப்பீடு செய்யப்பட்ட இலங்கையரல்லாத வாழ்க்கைத் துணையின் தங்கிவாழும் பிள்ளைகளுள் ஒருவர். | | இலவசம் |
| | 6. மரணித்த இலங்கையர் ஒருவரின் மறுமணம் செய்து இராத இலங்கையரல்லாத வாழ்க்கைத் துணைக்கு<br><br>(ஊழியத்துக்கான அங்கீகாரத்துடன்) (ஒவ்வொரு பன்னிரண்டு மாத காலப்பகுதிக்கு அல்லது அதன் பாகத்துக்கு) | | 100.00 |
| | 7. பத்து ஆண்டுகளுக்குக் குறையாமல் தொடர்ச்சியாக இலங்கையில் வாழும் இலங்கைப் பிரசை ஒருவரின் இலங்கையரல்லாத வாழ்க்கைத் துணை ஒருவருக்கு<br><br>(ஊழியத்துக்கான அங்கீகாரத்துடன்) (ஒவ்வொரு பன்னிரண்டு மாத காலப்பகுதிக்கு அல்லது அதன் பாகத்துக்கு) | | 100.00 |
| | 8. பதினெட்டு வயதுக்குக் குறைந்த குழந்தைகளை உடைய இலங்கைப் பிரசையொருவரின் இலங்கையரல்லாத வாழ்க்கைத் துணையொன்றிற்கு<br><br>(ஊழியத்துக்கான அங்கீகாரத்துடன்) (ஒவ்வொரு பன்னிரண்டு மாத காலப்பகுதிக்கு அல்லது அதன் பாகத்துக்கு) | | 100.00 |
| 2. வருகை தரல் விசா | சுற்றுலா நோக்கங்கள் | | |
| | | தொடரினையின் மூலம் | வந்து சேர்வதன் மேல் |
| | 1. பிராந்திய ஒத்துழைப்புக்கான தெற்காசிய கழக (சார்க்) நாடுகள்<br><br>(முப்பது நாட்கள் வரை) | 20.00 | 25.00 |
| | (இலத்திரனியல் பயண அதிகாரம்) (ETA) | | |

**பட்டியல்** *(தொடர்ச்சி)*

| | | | |
|---|---|---|---|
| | *சுற்றுலா நோக்கங்கள்* | | |
| | | *தொடரிணையின் மூலம்* | *வந்து சேர்வதன் மேல்* |
| | 2. சார்க் (SAARC) நாடு ஒன்று தவிர்ந்த ஏதேனும் நாடு<br><br>(முப்பது நாட்கள் வரை)<br><br>(இலத்திரனியல் பயண அதிகாரம்) (ETA) | *35.00* | *40.00* |
| | | *தொடரிணையின் மூலம்* | *குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் தலைமை அலுவலகத்திலிருந்து* |
| | 3. பின்வரும் பெயர் குறிக்கப்பட்ட நாடுகளுக்கு-<br><br>ஆஸ்திரியா, பெல்ஜியம், டென்மார்க், நெதர்லாந்து, போலந்து, இத்தாலி, பின்லாந்து, பிரான்ஸ், ஜேர்மன், அயர்லாந்து, ஸ்பைன், கிரேக்கம், சுவீடன், ஹங்கேரி, ஐக்கிய இராச்சியம், அவுஸ்திரேலியா, நியுசிலாந்து, ஐக்கிய அமெரிக்க நாடுகள், கனடா, ஜப்பான், சுவிட்சர்லாந்து, நோர்வே, போர்த்துக்கல், சுலோவேனியா, எஸ்டோனியா, மொரிஷியஸ், ஐஸ்லாந்து மற்றும் கியுபா<br><br>(முப்பது நாட்களின் பின்னர் தொண்ணூறு நாட்கள் வரை) | *100.00* | *100.00* |
| | 4. ஐக்கிய அமெரிக்க நாடுகளுக்காக (தொண்ணூறு நாட்களின் பின்னர் நூற்றி எண்பது நாட்கள் வரை) | - | இலவசம் |
| | 5. சிங்கப்பூர், மாலைதீவு, சீசெல்சு மற்றும் செக் குடியரசு ஆகிய நாடுகளுக்கு<br><br>(முப்பது நாட்களின் பின்னர் தொண்ணூறு நாட்கள் வரை) | - | இலவசம் |

**பட்டியல்** *(தொடர்ச்சி)*

| | | | |
|---|---|---|---|
| | சுற்றுலா நோக்கங்கள் | | |
| | | தொடரினையின் மூலம் | வந்து சேர்வதன் மேல் |
| | 6. பெயர் குறிக்கப்பட்ட நாடொன்று தவிர்ந்த ஏதேனும் நாடு, ஐக்கிய அமெரிக்க நாடுகள், சிங்கப்பூர், மாலைதீவு, சீசெல்சு மற்றும் செக் குடியரசு ஆகிய நாடுகளுக்கு (முப்பது நாட்களின் பின்னர் தொண்ணூறு நாட்கள் வரை) | - | 6000 |
| | 7. ஐக்கிய அமெரிக்க நாடுகள் தவிர்ந்த ஏதேனும் நாட்டுக்கு (தொண்ணூறு நாட்களின் பின்னர் நூற்றி எண்பது நாட்கள் வரை) | - | 150.00 |
| | 8. ஏதேனும் நாட்டுக்கு (நூற்றி எண்பது நாட்களின் பின்னர் இருநூற்றி எழுபது நாட்கள் வரை) | - | 200.00 |
| | தொழில் நோக்கங்கள் | தொடரினையின் மூலம் | வந்து சேர்ந்ததன் மேல் |
| | 9. பிராந்திய ஒத்துழைப்புக்கான தெற்காசிய கழக (SAARC) நாடுகள் (முப்பது நாட்கள் வரை) (இலத்திரனியல் பயண அதிகாரம்) (ETA) | 30.00 | 40.00 |
| | 10.சார்க் (SAARC) நாடு ஒன்று தவிர்ந்த ஏதேனும் நாடு (முப்பது நாட்கள் வரை) இலத்திரனியல் பயண அதிகாரம் (ETA) | 40.00 | 50.00 |
| | | குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் தலைமை அலுவலகத்திலிருந்து | |
| | 11. ஐக்கிய அமெரிக்க நாடுகளுக்கு (முப்பது நாட்களின் பின்னர் நூற்றி எண்பது நாட்கள் வரை) | 100.00 | |

**பட்டியல்** *(தொடர்ச்சி)*

| | | குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் தலைமை அலுவலகத்திலிருந்து |
|---|---|---|
| | 12. ஐக்கிய அமெரிக்க நாடுகள் தவிர்ந்த ஏதேனும் நாட்டுக்கு (முப்பது நாட்களின் பின்னர் தொண்ணூறு நாட்கள் வரை) | 100.00 |
| | 13.ஐக்கிய அமெரிக்க நாடுகள் தவிர்ந்த ஏதேனும் நாட்டுக்கு (தொண்ணூறு நாட்களின் பின்னர் நூற்றி எண்பது நாட்கள் வரை) | 200.00 |
| | 14.தனிப் பயணமொன்றிற்காக அல்லது பல பயணங்களுக்காக எல்லா நாடுகளுக்கும் (ஒவ்வொரு பன்னிரண்டு மாத காலப்பகுதிக்கு அல்லது அதன் பாகத்துக்கு)<br><br>(ஒவ்வொரு தங்கியிருக்கையும் ஆறு மாதங்களுக்கு மட்டுப்படுத்தப்படு கின்றது) | 200.00 |
| 3. இடைத் தங்கல் விசா | எல்லா நாடுகளுக்கும் | இலவசம் |

ஆயின், எவ்வாறாயினும் -

(அ) தூதுவ அல்லது உத்தியோகபூர்வ கடவுச்சீட்டொன்றை வைத்திருக்கும் ; அல்லது

(ஆ) எவரேனும் ஆளின் கடவுச்சீட்டின் மீது செல்லுபடியான தூதுவ அல்லது உத்தியோகபூர்வ புறக்குறிப்பொன்றை வைத்திருக்கும்,

அவ்வாளுக்கு விசா ஒன்றை அளிப்பதற்காக அல்லது வழங்குவதற்காக கட்டணம் எதுவும் செலுத்தப்படலாகாது.

(2) ஓராம் பந்தியில் முரணாக எது எவ்வாறிருப்பினும் -

(அ) (இலங்கை தவிர்ந்த) நாட்டினத்தவர் ஒருவர் அந்நாட்டுக்கான விசா ஒன்றிற்கு இலங்கைப் பிரசை ஒருவர் செலுத்துவதற்கு ஆளாகும் தொகையை விஞ்சாத பணத்தொகையொன்றை, வருகை தரல் விசா அல்லது இடைத்தங்கல் விசா ஒன்றிற்கு செலுத்துவதற்குத் தேவைப்படுத்தப்படலாம் ; அத்துடன்

(ஆ) இலங்கை அரசாங்கத்தின் சார்பாக இன்னொரு அரசாங்கத்தின் பிரதிநிதியால் எவரேனும் ஆளுக்கு வருகை தரல் விசா ஒன்று அல்லது இடைத்தங்கல் விசா ஒன்று அளிக்கப்படுகின்ற அல்லது வழங்கப்படுகின்றவிடத்து, அத்தகைய ஆள், இரு அரசாங்கங்களுக்குமிடையில் நிர்ணயிக்கப்பட்ட ஏதேனும் பணத்தொகையை அவ்விசாவுக்குச் செலுத்துவதற்கு தேவைப்படுத்தப்படலாம்.

*4.* பதினைந்தாம் ஒழுங்குவிதியில் "ஆறு மாதங்களை விஞ்சாத காலப்பகுதிக்காக" என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஒன்பது மாதங்களை விஞ்சாத காலப்பகுதிக்கான தனிப்பயணம் ஒன்றிற்காக அல்லது பல பயணங்களுக்காக" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

*06-517*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.